Judicial Form No.53
(See Rule 42)

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C.)

## IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, NAMAKKAL

## Sessions Case No. 49 of 2025

## Deposition of P.W.12 witness for Prosecution

| | | | |
|---|---|---|---|
| Name | : மருத்துவர். அருண்கௌதம் | Taluk | : |
| Father's/ Husband's Name | : | Calling | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 25th day of February 2026.

(Accused present.)

**முதல்நிலை விசாரணை:**

நான் தற்போது அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனை திருவள்ளூரில் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 13.05.2023அன்று அரசு மோகன குமாரமங்கலம் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சேலத்தில் சட்டம் சார்ந்த மருத்துவதுறையில் போதகராக பணிபுரிந்து வந்த போது ராசிபுரம் காவல் நிலைய குற்ற எண்.314/2023 வழக்கில் கொலையுண்டு இறந்துபோன சேட்டு என்கிற தங்கராஜ் (வயது 55) த/பெ.கருப்பண்ணன் என்பவரது இறப்பின் உண்மைதன்மையை அறியும் பொருட்டு பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்து தரும்படி ராசிபுரம் காவல் ஆய்வாளர் அவர்களின் வேண்டுகோள் கடிதத்தை ராசிபுரம் காவல் நிலைய தலைமை காவலர் (1303) **திரு.கிருஷ்ணமூர்த்தி** என்பவர் மூலம் பெற்று கொண்டேன். மேற்படி தலைமை காவலர் அவர்கள் பிரேதத்தை அடையாளம் காட்ட நான் அன்றே மதியம் 12.20க்கு பிரேத பரிசோதனை தொடங்கினேன். பிரேத பரிசோதனையில் பிரேத விறைப்பு உடல் முழுவதும் காணப்பட்டது. பிரேதமானது ரப்பர் போர்வையில் மர நிற போர்வையிலும் மூடி காணப்பட்டது.

பிரேதமானது மிகக்குறைவான ஊட்டச்சத்துடன் காணப்பட்டது. சிவப்பு நிற சிராய்ப்பு காயம் 21x8 செ.மீ வலது பின்பக்க முதுகில் மேல்பாகத்திலும் நடுப்பாகத்திலும் காணப்பட்டது. சிவப்புநிற சிராய்ப்பு காயம் 0.5x0.5 செ.மீ வலது வயிற்றின் மேல்பகுதியில் காணப்பட்டது. செங்குத்தாக உள்ள குத்துக்காயம் 2x1செ.மீxநெஞ்சு அரை ஆழத்தில் நடு நெஞ்சில் மேல்பகுதியில் காணப்பட்டது. அந்த குத்துக்காயம் மேல் நெஞ்சுகுழியிலிருந்து 6செ.மீ கீழே காணப்பட்டது. குத்துக்ககாயத்தின் கீழ் முனை கூராகவும், மேல்முனை மழுங்கியும் காணப்பட்டது. செங்குத்தாக சாய்ந்த குத்துக்காயம் 2x1செ.மீxநெஞ்சு அரை ஆழத்தில் இடது பக்க நெஞ்சில் கீழ் பகுதியில் காணப்பட்டது. அந்த குத்துக்காயம் இடது பக்க முலைக்காம்பிலிருந்து 10செ.மீ உள்ளே காணப்பட்டது. குத்துக்காயத்தின் கீழ் முனை கூராகவும், மேல்முனை மழுங்கியும் காணப்பட்டது. தலையை அறுத்து பார்த்தபோது, மண்டை தோல் சீராக காணப்பட்டது. கபால எலும்புகள் சீராக காணப்பட்டது. மூளை வீங்கி காணப்பட்டது. மூளை தண்டுவட திரவம் அதிகப்படியாக காணப்பட்டது. மூளையின் வெட்டுத்தோற்றம் வெளிறி காணப்பட்டது. கபால குழிகள் சீராக காணப்பட்டது. கழுத்தை அறுத்து பார்த்தபோது, கழுத்தை சுற்றியுள்ள தசைகள் சீராக காணப்பட்டது. ஹ யாய்டு எலும்புகள் சீராக காணப்பட்டது. குரல்வளையும் மற்றும் சுவாச குழாய் வெட்டுத்தோற்றத்தில் வெளிறி காணப்பட்டது. நெஞ்சை அறுத்து பார்த்தபோது இரண்டு பக்க விலாஎலும்புகளும் சீராக காணப்பபட்டது. வலது நெஞ்சு அறையில் 150ml இரத்தம் திரவ வடிவில் காணப்பட்டது. இடது நெஞ்சு அறை காலியாக காணப்பட்டது. இரண்டு நுரையீரல்களும் நெஞ்சு சுவற்றுடன் ஒட்டி காணப்பட்டது. வலது நுரையீரலின் மேல்பகுதி கன்றிய நிலையில் காணப்பட்டது. இரண்டு நுரையீரலும் வெட்டுத்தோற்றத்தில் வெளிறி காணப்பட்டது. இருதய பையில் கன்றிய காயம் 5x4செ.மீ அதன் மேற்பகுதியில் காணப்பட்டது. கன்றிய காயம் 3x2 செ.மீ இருதயத்தின் பெருந்தமனியின் வேரில் காணப்பட்டது. இருதயத்தில் இருதய அழற்சி அதன் மேற்பரப்பில்

காணப்பட்டது. இருதயத்தின் வால்வுகள் சீராக காணப்பட்டது. இருதயத்தின் தமனிகள் சீராக காணப்பட்டது. இருதயத்தின் 4 அறைகளிலும் இரத்தம் திரவ வடிவத்தில் காணப்பட்டது. வயிற்றை அறுத்து பார்த்தபோது வயிற்று அறை காலியாக காணப்பட்டது. இரைப்பையில் 150ml மஞ்சள் நிற திரவம் மற்றும் 50கிராம் பாதி செரிமானமடைந்த உணவு பொருட்கள் எந்தவித நெடியும் இல்லாமல் காணப்பட்டது. அதன் வெட்டுத்தோற்றம் வெளிறி காணப்பட்டது. சிறுகுடலில் 10ml பித்தநீர் எந்தவித நெடியும் இல்லாமல் காணப்பட்டது. அதன்வெட்டுத்தோற்றம் வெளிறி காணப்பட்டது. கல்லீரல் மற்றும் மண்ணீரல் சீராக காணப்பட்டது. அவைகளின் வெட்டுத்தோற்றம் வெளிறி காணப்பட்டது. மூத்திரப்பை காலியாக காணப்பட்டது. வலது சிறுநீரகம் சீராக காணப்பட்டது. திரவம் நிறைந்த நீர்க்கட்டிகள் இடது சிறுநீரகத்தின் மேற்பகுதியில் காணப்பட்டது. இரண்டு சிறுநீரகங்களும் வெட்டுத்தோற்றத்தில் வெளிறி காணப்பட்டது. இடுப்பு எலும்பு மற்றும் முதுகு எலும்பு சீராக காணப்பட்டது. விதைப்பை சீராக காணப்பட்டது. உடல் உள்ளுறுப்புகள் சேகரம் செய்து ரசாயன பகுப்பாய்விற்காக அனுப்பப்பட்டது. துணியில் இரத்தம் எடுத்து இரத்த வகைப்பாட்டிற்காக அனுப்பப்பட்டது. இறந்த நபர் பலதரப்பட்ட குத்துக்காயங்களினால் ஏற்பட்ட அதிகப்படியான இரத்தப்போக்கு மற்றும் அதிர்ச்சியால் இறந்திருக்கக்கூடும். இறந்த நபர் பிரேத பரிசோதனைக்கு முன் 12லிருந்து 24 மணி நேரத்திற்குள் இறந்திருக்ககூடும் என கருத்துரை வழங்கினேன். பின்பு ரசாயன பகுப்பாய்வின் ஆய்வறிக்கையை பெற்று இறப்பின் காரணத்தை ஏற்கனவே பிரேத பரிசோதனையில் குறிப்பிட்டுள்ளேன். உடல் உள்ளுறுப்புகளில் எந்தவிதமான நச்சு பொருளோ, ஈத்தைல் ஆல்கஹாலோ காணப்படவில்லை என இறுதி கருத்துரை வழங்கினேன். நான் வழங்கிய கருத்துரையுடன் கூடிய பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.13 ஆகும். நான் வழங்கிய இறுதி கருத்துரை அ.சா.ஆ.14 ஆகும்.

என்னிடம் காட்டப்படும் கத்தியால் குத்துவதால் இறந்த நபருக்கு ஏற்பட்டுள்ள காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை:** இல்லை.

**மறுவிசாரணை** : இல்லை.

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்ல என்னால் கூற, தட்டச்சு செய்யப்பட்டு அவருக்கு படித்துக்காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கைரேகை/கையெழுத்து இட்டார்.

Sd/- R. Gurumurthy
முதன்மை மாவட்ட நீதிமன்ற நீதிபதி,
நாமக்கல்.